# இயேசுவுடன் வாழ்தல்

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

3
புத்தகம் மூன்று

## பேசுதலும், கேட்டலும்

டெபின் கேர்க்



PHILIP

தமிழ் மொழிபெயர்ப்பு திருமதி வசந்தா அரியசிங்கம்

# இயேசுவுடன் வாழ்தல் 3

புத்தகம் மூன்று

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

## பேசுதலும், கேட்டலும்

டெபின் கேர்க்

கெவின் மேஹியூ

# TALKING AND LISTENING

First Edition
Copyright 2004 Lanka Philip Mission.
All right reserved.

No part of this publication shall be reproduced or
transmitted in any means, electronic, mechanical
electronic, including recording photocopying,
any retrieval and information storage system
without permission in writing from the publisher.

ISBN 955 - 8673 - 41 - 2

Published & Distributed by
**Lanka Philip Mission.**

# இயேசுவுடன் வாழ்தல்

பிள்ளைகளுக்கான ஒரு வழிகாட்டி

இயேசுவைப் பற்றிய அறிவை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் படி, டெபின் கேர்க் அவர்கள் இப்புத்தகத்தை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார்.

இது எட்டு புத்தகங்களைக் கொண்டது. அவற்றுள் இது மூன்றாவது புத்தகமாகும்.

"பிள்ளையும், பிள்ளையின் விசேஷ தோழன்" என்று இப்புத்தகத்தில் பெயர் சூட்டி இருக்கும் முதியவர் (வேதபாடசலை ஆசிரியை அல்லது ஆசிரியராக இருக்கலாம்) ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலக்கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தல் இங்கே இடம் பெறுகின்றது. இதன் மூலம் இயேசுவோடு கூட அவர்கள் இருவரும் வைத்துள்ள உறவும், அவர்கள் இருவர் மத்தியில் வைத்துள்ள உறவும் வளர்ச்சி பெறுகின்றது.

கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய சிந்தனைகள் மூலம் பிள்ளையைக் குறித்து மிகவும் இலகுவாக விளக்கப்படுத்தியிருப்பதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வேதவசனங்களின் மூலம், படங்களை நிறந்தீட்டுவதின் மூலம், மனனம் செய்வதின் மூலம் மற்றும் இருவருக்கிடையில் ஏற்படும் சம்பாஷனையின் ஊடாகவும் கிறிஸ்தவ சிந்தனையானது மிகவும் ஆழமாக பிள்ளைகளுக்குள் கிரியை செய்கின்றது.

சீஷர்களை கட்டியெழுப்பும் போது பயன்படுத்தக் கூடிய விதத்தில் முழுமை பெற்ற பாடநெறியாக இப்புத்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ விசுவாசமானது பயிற்சிக்குரிய விதத்தில் கிரியை செலுத்துவதற்கும், இருவரும் சேர்ந்து ஜெபித்து, தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுதல், ஆகியவை இப்புத்தகத்தில் அடங்குகின்ற படியால் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

"இயேசுவுடன் வாழ்தல்" புத்தகத்தினூடாக உங்கள் ஜீவியத்திலும், உங்கள் உதவியை பெறும் பிள்ளையின் ஜீவியத்திலும் ஒரு மாறுதல் அடைவதோடு, எமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் சகல வழிகளிலும் வளர்ச்சி பெற இது உங்கள் இருவருக்கும் நல்லதொரு வழிகாட்டி.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பகுதி 1: | பேசுதலும், கேட்டலும் | - 01 |
| பகுதி 2: | முக்கியமானவர் யார்? | - 08 |
| பகுதி 3: | சரி பார்த்தல் | - 14 |
| பகுதி 4: | அவருடைய சத்தத்தை அறிதல் | - 21 |
| பகுதி 5: | இயேசுவுடன் இருத்தல் | - 26 |




# பேசுதலும், கேட்டலும்

புத்தகம் 3 மூன்று

எனது பெயர் :- ______________________

எனது நண்பர் :- ______________________

எனது சபை :- ______________________

______________________

______________________

அன்று சந்திப்போம் :- ______________________

______________________

எனது விலாசம் : ______________________

______________________

______________________

______________________

______________________


# 1

# பேசுதலும், கேட்டலும்




# பேசுதலும், கேட்டலும்

"பேசுதலும், கேட்டலும் என்ற இரண்டு காரியமும் நீர் உமது நண்பனுடன் நேரத்தை செல விடும் பொழுது நடைபெறுகின்றது என்பதை நீர் கவனித்ததுண்டா? நீர் ஒருவருடன் பேசும் பொழுது, அவர் அதைக் கேட்காவிட்டால் அது வேடிக்கையான அனுபவம்."




## பின்பு




நாம் கடவுளுடன் நேரத்தை செலவிடும் பொழுது, இதுவே நடக்கின்றது என்பதை எப்பொழுதாவது நீர் எண்ணிப் பார்த்ததுண்டா?

## பேசுதலும், கேட்டலும்



“ஒருவர் எங்கே இருக்கின்றார் என்று தெரியாவிட்டால், அவர் பேசுவதைக் கேட்பது கடினம். அது போலவே தான் கடவுள் பேசுவதைக் கேட்க வேண்டுமானால், அவர் எங்கே இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.”

? அவர் எங்கே இருக்கின்றார் என்று நீர் எண்ணுகின்றீர்?

கலாத்தியர் 2:20ஐ வாசித்துப் பதிலைக் கண்டு கொள்ளவும்.

“கிறிஸ்துவே எ............
பி...............................”

? எனவே இயேசு எங்கே இருக்கின்றார்? ____________________

அவர் தனது சொந்தப் பரிசுத்த ஆவியை எம்முள் வாழ்வதற்காக அனுப்பியிருக்கின்றார்.

நீர் எப்பொழுதாவது இயேசு பேசுவதைக் கேட்டதுண்டா? ____________________
“ஆம்” என்று சொல்வீரானால் அதைப் பற்றிக் கூறும். ____________________

____________________

____________________

____________________

____________________

____________________

## 1 சாமுவேல் 3 : 2 -11ஐ வாசிக்கவும்.

இங்கு அருமையான ஒரு கதை உண்டு.

இப்பொழுதே அதை இணைந்து நீங்கள் வாசிக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

**சே** கதையை நீங்கள் வாசித்தீர்களா? ஆம் / இல்லை

சாமுவேல் ஒரு பிள்ளையா? ____________________

கடவுள் பேசியதை அவன் தெளிவாகக் கேட்டானா? ____________________

அவர் உங்களுடன் பேசுவதை, உங்களால் கேட்க முடியுமென்று எண்ணுகின்றீர்களா? ____________________

இந்தக் கதை மிகவும் விசேஷமானது என நான் எண்ணுகின்றபடியால், அதன் படத்தை நீங்கள் வரையுங்கள்.



இயேசு உங்களுடன் பேசுவதை நீங்கள் கேட்கலாம் என்று, நீங்கள் எண்ணியதுண்டா?

அவர் *உங்களில்* இருக்கின்றார் என்பதை நினைவில் வைத்திருங்கள்!

இப்பொழுது நீங்கள் *செவிமடுக்க* வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

உங்களுடைய ஆழத்தில் அவர் பேசுவதைக் கேட்பீர்கள் (அதாவது, உங்கள் ஆவியில்) இப்பொழுது சொல்லுங்கள்,

*என்னோடு பேசும் இயேசுவே, நான் கேட்டுக் கொண்டு இருக்கின்றேன்.*

பின்பு கண்களை மூடி மிக அமைதியாக இருங்கள்.

சில வினாடிகளுக்குப் பின்பு கண்களைத் திறந்து, அவர் என்ன உங்களுக்குச் சொன்னார் என உணர்ந்தீர்கள் என்பதை, இந்தப் பெட்டிக்குள் எழுதுங்கள்.

இயேசுவே எனக்குச் சொன்னார்
"நீ ______________________________"
என்று நான் நினைக்கின்றேன்.

பின்பு அவர் உங்களுக்குச் சொல்கின்றார் என்று நீங்கள் எண்ணுகின்றவற்றை இங்கு எழுதுங்கள்.

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________



# மனன வசனம்




- இந்த வசனமே நீங்கள் இந்த வாரத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது. நீங்கள் இதைக் கற்று உங்கள் விசேஷித்த நண்பருக்குக் கூறலாம் அல்லது இருவருமாக இணைந்து கற்கலாம்.

**கிறிஸ்துவே என்னுள் பிழைத்திருக்கிறார்;
நான் இப்பொழுது மாம்சத்தில்
பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு
கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்
கொடுத்த தேவனுடைய குமாரனைப்
பற்றும் விசுவாசத்தினாலே
பிழைத்திருக்கிறேன்.**

கலாத்தியர் 2 : 20

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்



சில வேளைகளில் இயேசு நமக்குப் படங்களைத் தருகின்றார்.

அவை உங்களுக்குச் சில அர்த்தத்தைக் கொடுக்கும் அல்லது வேறு ஒருவருக்கு அர்த்தத்தைக் கொடுக்கும்.


நீங்கள் இயேசுவிடம் பேசும் படி கேட்டது போல், உங்களுக்கு ஒரு படத்தைத் தர வேண்டுமென, இயேசுவிடம் நீங்கள் இருவரும் கேட்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அவர் கொடுக்கும் படம் உங்களுக்கு விளங்காவிட்டால் கவலைப்பட வேண்டாம், ஏனென்றால், உங்களுடைய விசேஷித்த நண்பன் அதைப் பற்றி உங்களுடன் கதைப்பார். உமது விசேஷித்த நண்பருடன் அவருக்குக் கொடுக்கப்பட்ட படத்தைப் பற்றி நீர் பேசக் கூடியதாக இருக்கும்.

**கண்களை மூடி இயேசுவிடம், அவரை மேலும் அறிந்து கொள்வதற்கு உதவக் கூடிய படம் ஒன்றைத் தரும்படி கேட்கவும்.**

பின்பு கண்களைத் திறந்து உங்களுக்கு அவர் கொடுத்த படத்தை வரையவும்.

# 2

# முக்கியமானவர் யார்?



# முக்கியமானவர் யார்?

இயேசு தன் பிதாவுடன் *பேசுவதிலும்*, பேசுவதைக் *கேட்பதிலும்* நேரத்தைச் செலவிட்டார்.

**லூாக்கா 5 : 16ஐ வாசிக்கவும்.**

இயேசு ஜெபிப்பதற்கு எங்கு சென்றார்? த ...................... இ ......................

அவருடைய பிதா பேசுவதை தனது ஆழத்தில் கேட்பதற்காக அமைதியான இடத்திற்கு அவர் சென்றார். (அவரது ஆவியில்)

எத்தனை தடவைகள் செய்தார்? ..........................................................

இப்பொழுது லூாக்கா 6: 12ஐ வாசிக்கவும்.

இந்தத் தடவை ஜெபிப்பதற்கு அவர் எங்கே சென்றார்? ம ......................

பிதாவுடன் பேசவும், பிதா பேசுவதைக் கேட்கவும் நேரம் செலவிடுவது முக்கியமானது என இயேசு எண்ணினாரா? ஆம் / இல்லை

இயேசு அது மிகவும் முக்கியமென, அவர் எண்ணினாரென நான் நினைக்கின்றேன்.

நண்பர்களுடன் விளையாடுவது, தொலைக்காட்சி பார்ப்பது போன்று, நீங்கள் எண்ணுகின்ற முக்கியமான சில காரியங்கள் இருக்கின்றன. உங்களுக்கு முக்கியமான காரியங்களை இங்கு நிரைப்படுத்தவும்.



ஜெபத்தை உங்கள் பட்டியலில் கொடுத்திருப்பீர்களோ என்று நான் ஆச்சரியப்படுகின்றேன்.

இயேசு தனது பட்டியலில் ஜெபத்தைப் போட்டிருப்பார் என்று நீர் எண்ணுகின்றீரா?

______________________________

நேரத்தை செலவிட நீர் விரும்புகின்ற விசேஷித்த நண்பர்கள் உமக்கு இருக்கின்றார்கள். அந்த நண்பர்கள் யார்?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________



இயேசு ஒரு விசேஷித்த நண்பர்.

அவர் உமது பட்டியலில் உள்ளாரா?

உம்மோடு பேசுவதில் நேரத்தைச் செலவிட அவர் விரும்புகின்றார். அவரிடம் விசேஷித்த நண்பர்களுடைய பட்டியல் ஒன்று உண்டு.

அவரது பட்டியலில் உமது பெயர் இருக்குமென, நீர் எண்ணுகின்றீரா?

# ஆம்

இயேசுவின் பட்டியலில் நீர் இருக்கின்றீர். நீர் அவருடன் சேர்ந்து *பேசுவதிலும், கேட்பதிலும்* செலவிட்ட நேரங்களை அவர் விரும்புகின்றார்.

இந்தப் புத்தகத்தின் கடைசியாகப் படித்த பகுதியில் உள்ள கடவுளுடன் *பேசுவதும், கேட்பதும்* என்ற பகுதி நினைவு இருக்கின்றதா? ____________

நீங்கள் இருவரும் இன்று மீண்டும் அவருக்குச் செவி கொடுக்க வேண்டும் என விரும்புகின்றேன். நீர் உமது ஆழத்தில் அவர் பேசுவதைக் கேட்பீர். (உமது ஆவியில்)


நீர் உமது கண்களை மூடினால், நீர் இன்னும் கவனமாகக் கேட்க உதவும்.

இயேசுவே என்னோடு பேசும் நான் கேட்கின்றேன் என்று சொல்லுங்கள். உமது அன்பைப் பற்றி எனக்கு நீர் என்ன சொல்லப் போகின்றீர்?

இப்பொழுது கண்களைத் திறந்து அவர் உமக்குச் சொன்னதை இங்கு எழுதவும்.

| இயேசு எனக்குச் சொன்னார். | இயேசு எனது நண்பனுக்குச் சொன்னார். |
|---|---|
| எனது அன்பு ____________ | எனது அன்பு ____________ |
| அத்துடன், அவர் உமக்குச் சொல்லும் வேறு விடயங்களை எழுதவும். | அத்துடன், அவர் உமக்குச் சொல்லும் வேறு விடயங்களை எழுதவும். |

# மனன வசனம்





நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது -
மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால்
என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்
கொள்ளுகிறேன். அவர்களெல்லோரும் ஒன்றாயிரு
- க்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை
உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும்,
நான் உம்மிலேயும் இருக்கிறது போல
அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்
வேண்டிக் கொள்ளுகிறேன்.

யோவான் 17 : 20 - 21

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

இந்தப் பகுதியில் நீங்கள் செய்தவற்றைப் பற்றி உங்கள் இருவரிடமும் பேசும் படி இயேசுவைக் கேட்கவும். அவர் உமக்கும், உமது விசேஷித்த நண்பனுக்கும் சில வார்த்தைகளைக் கொடுக்கலாம் அல்லது ஒரு படத்தைக் கொடுக்கலாம்.



அவர் ஒரு படத்தைக் கொடுத்தால், அவர் அந்தப் படத்தின் மூலம் உமக்கு எதைச் சொல்லுகின்றார் என நீர் எண்ணுகின்றீரோ, அந்தப் படத்தின் கீழ் எழுதவும். உமக்குத் தேவயானால் உமக்கான செய்தியை அறிந்து கொள்ள உமது விசேஷித்த நண்பன் உதவலாம். ஆனால், முதலில் இயேசுவோடு அமைதியாக இருக்க வேண்டுமென்பதை நினைவில் வைத்திருக்கவும்.

அவர் உம்மோடு பேச வேண்டுமென்று நீர் விரும்புகின்ற ஒன்றைத் தெரிவு செய்து அவரிடம் சொல்லவும்.

கடவுளாகிய இயேசுவே தயவாக என்னொடு ........................................ இது பற்றிப் பேசும்

நீர்

கடவுளாகிய இயேசுவே தயவாக என்னொடு ........................................ இது பற்றிப் பேசும்

உமது விசேஷித்த நண்பன்

# 3

# சரிபார்த்தல்!



## சரி பார்த்தல்!

வேதாகமத்தை எழுதிய மனிதர் தான் எதை எழுத வேண்டுமென, என்ன விதமாக அறிந்து கொண்டாரென நீர் எண்ணுகின்றீர்.

-----------------------------------------------------------------------------------------------

அதற்குப் பதில், இயேசுவின் பரிசுத்த ஆவி அவர்களுக்கு அதை எழுத வேண்டுமெனக் கூறினார்.

அவர் உங்களுடன் பேசுவார்.

**வேதாகமத்தோடு அவர் ஒத்துப் போவார்.**


வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் எதைக் கூறியிருக்கின்றார் என்று எமது உள்ளத்தின் ஆழத்தில் விளங்கிக் கொண்டிருப்பது மிக முக்கியம். (எமது ஆவியில்)

இதுவே நடைபெறுகின்றது -

எங்கள் கண்களால் நாம் வாசிக்கின்றோம்.

நாம் எதை வாசிக்கின்றோமோ, அது எமது உள்ளத்திற்குள் செல்லுகின்றது.


அது இந்த விதமாக எமது இருதயத்திற்குள் விளலாம்.



வேதாகமத்தில் விளங்கிக் கொள்ளக் கடினமான சில பகுதிகள் உண்டு. நான் உமக்கு உதவி செய்வதும் - உம்முடைய விசேஷித்த நண்பன் இருப்பதும், கடினமான பகுதிகளை நீர் விளங்கிக் கொள்ள உதவி செய்யவே.

நீர் வேதாகமத்தை நன்றாக அறிந்து கொள்ளும் வரையும், நீர் எழுதியவைகள் வேதாகமத்தோடு ஒத்துப் போகும் வரையும், இயேசு உமக்குக் கூறியவற்றை உமது விசேஷித்த நண்பனுடன் பகிர்ந்து கொள்வது முக்கியம்.

செய்யவும் .............




= ஒத்ததா?



ஒரு சிறிய புதிரைப் பார்ப்போம் :

தரப்பட்டிருக்கும் வாக்கியங்கள் வேதாகமத்தோடு ஒத்துப் போவதாக இருந்தால் "சரி" எனவும், ஒத்துப் போகாதவற்றிற்கு "பிழை" எனவும் குறியிடுக.

இயேசு என்னை அதிகமாக நேசிக்கின்றார் ☐

நான் இயேசுவோடு நேரத்தைச் செலவிடும் போது, அவர் சந்தோஷப்படுகின்றார் ☐

வாழைப்பழத்தைச் சாப்பிட வேண்டாமென்று இயேசு சொல்கின்றார் ☐

சில வேளைகளில் விஷமத்தனமாக இருப்பது சரி ☐

"நான் ஒரு போதும் உன்னை விட்டு விலகுவதில்லை" என இயேசு சொல்லுகின்றார் ☐

ஒரு விளக்கும், ஒரு வெளிச்சமும் நமக்கு என்ன செய்யும்?

**சங்கீதம் 119 : 105ஐ வாசிக்கவும்.**

# "உம்முடைய வசனம் என்

_______________ _______________,

என் _______________ _______________"

எனவே, வேதாகமத்தில் உள்ள கடவுளுடைய வார்த்தை நாம் எந்த வழியில் செல்ல வேண்டுமென்பதை தெளிவாகக் கண்டு கொள்வதற்கு உதவும். எனவே தான் அவரது வார்த்தையை அறிவதும், எல்லா விடயங்களும் அதனுடன் ஒத்துப் போகின்றதா என்று சரி பார்ப்பதும் மிக முக்கியம்.

விசேஷமான காரியத்தை பகிர்ந்து கொள்ளப் போகின்றேன்.


டனியெல்லா எனது சிறிய பெண், அவள் இயேசுவோடு அமைதியாகத் தனது நேரத்தைச் செலவிடுவாள். அவள் வேதாகமத்தை வாசிப்பதுடன், இயேசுவுடன் வாழ்தலையும் தனக்கு உதவியாக உபயோகிப்பாள். அவள் இயேசுவிடம் "நீர் எனக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்" என்று கேட்ட பொழுது, இயேசு பதிலளித்தார்.

"நான் உன்னை நேசிக்கின்றேன். நீ பெறுமதி வாய்ந்தவள்,
நீ செய்கின்ற, நான் விரும்பாத காரியங்களை என் மேல் வைத்து
விடு. நான் உன்னை அவற்றிலிருந்து விடுவிப்பேன். நீ எதைச்
செய்ய வேண்டுமென நான் விரும்புகின்றேனோ, அதைச் செய். வேறு
ஒருவரையும் உனது வழியில் குறுக்கிட விட வேண்டாம். நீ எனது
மகள். எனவே, நான் உன்னை இவ்வுலகத்திலுள்ள செல்வங்கள்
எல்லாவற்றிலும் பார்க்கப் பெறுமதி வாய்ந்த
பொக்கிஷமாக வைத்திருக்கின்றேன்.


?

டானியெல்லா எழுதியவைகள்
வேதாகமத்தோடு ஒத்துப்
போகின்றனவா? ஆம் /இல்லை பதில் : ஆம்

இயேசு சொல்வதெல்லாவற்றையும் டனியெல்லா ஒரு விசேஷ புத்தகத்தில்
எழுதுவாள். இயேசுவுடன் வாழ்தல் புத்தகங்களுக்கூடாகச் சொல்லும்
பொழுது, யார் தன்னுடன் பகிர்ந்து கொள்கின்றார் என்பதைத் தனது
விசேஷித்த நண்பனுக்குக் காண்பிப்பாள். இயேசுவிடமிருந்து
வந்த விசேஷ வார்த்தைகளை, இருவருமாகச்
சேர்ந்து அனுபவிப்பார்கள்



# மனன வசனம்





**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**

சங்கீதம் 119 : 105

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

இப்பொழுது உங்களுடைய முறை



நீங்கள் அவரைப் பேசும் படி கேட்டு
அந்த வார்த்தைகளை எழுதலாம்,
அல்லது
அவரிடம் ஒரு படத்தை நீங்கள்
கேட்கலாம், அல்லது
நீங்கள் இரண்டையுமே கேட்கலாம்.

| உமது விசேஷித்த நண்பன் | நீர் |
|---|---|
| | |

# 4

# அவருடைய சத்தத்தை அறிதல்




# அவருடைய சத்தத்தை அறிதல்

கடந்த பகுதியில் நான் டனியெல்லாவின் மிக விசேஷ புத்தகத்தைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என டனியெல்லா கூறினார். அவள் இயேசுவிற்குச் செவி கொடுத்து அவர் சொல்வதை தனது புத்தகத்தில் எழுதுவாள் .

இது அவள் புத்தகத்தின் இன்னுமொரு பக்கம். அவள் எப்பொழுதும் பக்கத்தின் மேல் பகுதியில் திகதியை எழுதுவாள்.

இயேசுவே, நான் என்ன செய்ய வேண்டுமென நீர் விரும்புகின்றீர்?

நீ நல்லவளாகவும், மற்றவர்களை நம்புகின்றவளாகவும் இருக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன். எப்படி நான் உன்னை உருவாக்கினேனோ அது போலவே இருந்து, யாருக்கு நீ சேவை செய்ய வேண்டுமென விரும்புகின்றேனோ அந்த சேவையைச் செய். மிகவும் கஷ்டப்பட வேண்டாம். எது நல்லதோ அதைச் செய், ஏனென்றால் நான் உன்னை நேசிக்கின்றேன். நீ கஷ்டப்படுவதையோ, மேலதிகமாகச் செய்வதையோ நான் விரும்பவில்லை.



இது வேதாகமத்தோடு ஒத்துப் போகின்றதா? ஆம் / இல்லை

இதற்கான பதில் : ஆம்

## யோவான் 10 : 2 - 4ஐ வாசிக்கவும்.

ஆடுகளைக் கூப்பிட்டது யார்? ----------------------------------------------------------------

ஆடுகள் மேய்ப்பனுக்குச் செவி கொடுத்தனவா? ------------------------------------------

ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருந்தனவா? ------------------------------------

எங்களுடைய மேய்ப்பன் யார்? ---------------------------------------------------------

இயேசுவின் ஆடுகள் யார்? ------------------------------------------------------------

எங்களோடு பேசுவது யார்? ------------------------------------------------------------

நாம் அவருக்கு செவி கொடுக்கின்றோமா? ----------------------------------------------

நாம் அவர் சத்தத்தை அறிந்திருக்கின்றோமா? -----------------------------------------

நீங்கள் *கேட்பதற்கு* நேரத்தை செலவிடும் மக்களுடைய சத்தத்தை அறிந்திருக்கின்றீர்களா? யாருடைய சத்தத்தை நீங்கள் அதிகமாக அறிந்திருக்கின்றீர்கள்? ------------------------------------------------------------

இயேசுவோடும் அது போலவே நீங்கள் அவருடைய சத்தத்தைக் *கேட்க* எவ்வளவு அதிக நேரத்தை செலவிடுகின்றீர்களோ, அவ்வளவு அதிகமாக அவரது சத்தத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.


இது எனக்கு *உண்மையாகவே* ஊக்குவிப்பதாக இருந்தது.

நீர் அதிக நேரத்தைக் *கேட்பதில்* செலவிட்டு உமது மேய்ப்பரின் (இயேசு) சத்தத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

உமக்கு ஆரம்பிப்பதற்கு நான் உதவியாயிருக்கிறேன். நீர் எங்கேயாவது அமைதியாக இயேசுவேடு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

***அவருக்குச் செவி கொடுக்கவும்.***

# மனன வசனம்



• இந்த வசனமே நீங்கள் இந்த வாரத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது. நீங்கள் இதைக் கற்று உங்கள் விசேஷித்த நண்பருக்குக் கூறலாம் அல்லது இருவருமாக இணைந்து கற்கலாம்.

**ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவி கொடுக்கிறது அவன் தன் ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகின்றான்.**

யோவான் 10 : 3

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

நீர்

உமது விசேஷித்த நண்பன்



| நீர் | உமது விசேஷித்த நண்பன் |
| --- | --- |
| அன்பான மக்கள் பற்றி என்னோடு கதையும்.... | அன்பான மக்கள் பற்றி என்னோடு கதையும்.... |

இயேசு வேதாகமத்தில் போதித்ததை நீர் எழுதியிருக்கின்றீர்?

ஆம் / இல்லை

| | |
| --- | --- |
| நான் உம்மை அதிகமாக நேசிப்பதுடன்............. | நான் உம்மை அதிகமாக நேசிப்பதுடன்............. |

இப்பொழுது நீங்கள் எழுதியதை ஒருவருக்கு ஒருவர் வாசித்துக் காட்டுங்கள்.

# 5

# இயேசுவுடன் இருத்தல்



# இயேசுவுடன் இருத்தல்

**லூக்கா 10 : 38 - 42ஐ வாசிக்கவும்.**

இயேசு சந்திக்கச் சென்ற இரு பெண்களினதும் பெயர் என்ன?

_______________ , _______________

40 ஆம் வசனத்தில், ஏன் மார்த்தாள் குளப்பத்துடன் இருந்தாள் என்று கூறப்பட்டிருக்கின்றது? _______________

ஒரு நாள் இயேசு மார்த்தாளினதும், மேரியினதும் வீட்டை வந்தடைந்தார்.

அவர் அங்கு வந்து சேர்ந்த போது இயேசுவிற்கு எல்லாம் திருப்திகரமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, மார்த்தாள் அவசர அவசரமாக வீட்டைச் சுத்திகரித்து, விசேஷ உணவையும் சமைத்தாள்.

மேரி இயேசுவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்டாள்.

இயேசு சந்திக்க மாத்திரமே வந்திருந்தார், அவர் அங்கு அதிக நேரம் தங்கப் போவதில்லை. எனவே, இவர்களில் யார் இயேசுவை சந்தோஷப்படுத்தியிருக்க முடியுமென நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

அவரை இன்னமும் அறிந்து கொள்வதற்கும், அவர் அன்பை இன்னுமாக உணர்வதற்கும், அவர் தனக்குச் சொல்ல விரும்பிய விடயங்களைக் கேட்பதற்கும், மேரி இயேசுவிற்கு செவி கொடுத்தாள்.

நாம் அவருடன் நேரத்தைச் செலவிடாமல், பல்வேறு காரியங்களைச் செய்வதிலும் பார்க்க, மேரியைப் போல நாமும் நேரத்தை ஒதுக்கி அவரோடு செலவிடுவதையே இயேசு விரும்புகின்றார்.

இப்பொழுது இந்த வினாக்களுக்கு விடை தரவும். ஆனால், விடைகளைப் பற்றி மிகவும் கவனமாகச் சிந்திக்கவும்.......

இயேசு எவ்வளவு தூரம் உங்களை நேசிக்கின்றார்?

________________________________________

நீங்கள் நல்லவர்களாக இருக்கும் பொழுது அவர் உங்களை அதிகமாக நேசிக்கின்றாரா?

________________________________________

நீங்கள் நன்றாக எதையாவது செய்யும் பொழுது அவர் உங்களை அதிகமாக நேசிக்கின்றாரா?

________________________________________

நீங்கள் ஏதாவது ஒரு விடயத்தில் மிக நன்றாக இல்லாவிட்டால், அவர் உங்களைக் குறைவாகவே நேசிக்கின்றாரா?

________________________________________

அநேகமான மக்கள், வளர்ந்தோர், பிள்ளைகள் தங்கள் இருதயத்தில் விளங்கிக் கொள்ளாத விடயத்தை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகின்றேன்.

நீங்கள் *செய்யும்* காரியங்களைப் பகிர்ந்து கொள்ள இயேசு விரும்புகின்றார். உங்களோடு இணைந்து காரியங்களைச் *செய்வதில்* அவர் சந்தோஷப்படுகின்றார். நீங்கள் காரியங்களை நன்றாகச் *செய்யும்* பொழுது அவர் மகிழ்ச்சியடைகின்றார். நீங்கள் தவறு செய்யும் பொழுது அவர் துக்கப்படுகின்றார்.

ஆனால்

**இயேசு ஒரு விசேஷமான அன்பினால் உங்களை நேசிக்கின்றார். அது (agape) அளவிட முடியாத அன்பு. அது என்னவென்றால், அவருடைய அன்பு என்றுமே மாறாதது. நீங்கள் எதையும் அவருக்குச் செய்யாவிட்டாலும் அவர் உங்களை நேசிக்கின்றார். நீங்கள் விஷமத்தனமாக இருந்தாலும், அவருடைய அன்பு சிறிதளவேனும் மாறாது.**

அவர் உங்களை அளவுக்கதிகமாக (agaype - அளவிட முடியாத அன்பு)
நேசிக்கின்றார். அவர் உங்கள்மேல் வைத்த அன்பை
ஒருவரும் அளவிட முடியாது.



இப்பொழுது இதை நீங்கள் உங்களுடைய
விசேஷித்த நண்பனுக்கு வாசியுங்கள், பின்பு
உங்களுடைய விசேஷித்த நண்பன் உங்களுக்கு வாசிக்கட்டும்.

நான் நல்லவனாக இருக்கும் பொழுதும் அவர்
என்னை நேசிக்கின்றார்.

நான் விஷமத்தனம் பண்ணும் பொழுதும் அவர்
என்னை நேசிக்கின்றார்.

நான் சந்தோஷமாக இருக்கும் பொழுதும் அவர்
என்னை நேசிக்கின்றார்.

நான் துக்கமாக இருக்கும் பொழுதும் அவர்
என்னை நேசிக்கின்றார்.

நான் எதையாவது நன்றாகச் செய்யும் பொழுதும்
அவர் என்னை நேசிக்கின்றார்.

நான் ஏதாவது தவறு செய்யும் பொழுதும்
அவர் என்னை நேசிக்கின்றார்.


என்னை, நானாகவே அவர் நேசிக்கின்றார்.

(உமது பெயரை இங்கு எழுதவும்)

______________________________

(விசேஷித்த நண்பர் - உமது பெயரை இங்கு எழுதவும்)


______________________________



இப்பொழுது நீங்கள் மேரியைப் போல் சில நாளிகைகளைச் செலவிட வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

மார்த்தாளைப் போல் அவசரப்படாமல். அமர்ந்திருந்து, உங்களைச் சுற்றி அமைதி நிலவுவதை உறுதி செய்யுங்கள்.

இந்தப் புத்தகத்தையும், உங்கள் பென்சிலையும் உங்களோடு வைத்திருங்கள். இப்பொழுது, உங்கள் கண்களை மூடி, நீங்கள் மேரி செய்தது போல இயேசுவின் பாதத்தடியில் உட்கார்ந்து இருப்பது போலக் கற்பனை செய்யுங்கள்.




கண்களை மூடியபடியே அதைக் கற்பனை செய்வதில் சிறிது நேரத்தை செலவிடுங்கள்.

நீங்கள் அவருடைய பாதத்தடியில் இருக்கும் பொழுது இயேசு என்ன சொல்லுகின்றார் என்று எண்ணுகின்றீர்களோ, அதை இருவரும் இப்பொழுது எழுதுங்கள்.

நீங்கள் இப்பொழுது அதை நிறுத்தி விட்டு மீண்டும் இந்தப் புத்தகத்தைப் பார்க்க விரும்பலாம் பின்பு அவருடைய பாதத்தடியில் இருக்கும் பொழுது இயேசுவிடம் நீங்கள் ஒரு படத்தைக் கேட்கலாம். அல்லது இன்னும் சிறிது நேரம் அவரோடு செலவிட்ட பின்பு

அவரிடம் ஒரு படத்தை நீங்கள் கேட்கலாம் ......

# மனன வசனம்




• இந்த வசனமே நீங்கள் இந்த வாரத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது. நீங்கள் இதைக் கற்று உங்கள் விசேஷித்த நண்பருக்குக் கூறலாம் அல்லது இருவருமாக இணைந்து கற்கலாம்.

## தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கின்றார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது.


1 யோவான் 5 : 11

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்



இயேசு அருகில் இருக்கின்றார் என்பதை
இருவருமாகக் கற்பனை செய்யுங்கள்.
நீங்கள் அவருக்குச் சொல்ல விரும்புவதை,
இருவருமாகச் சத்தமாகச் சொல்லுங்கள்.

பின்பு நீங்கள் இருவருமாக அவர் பாதத்தடியில்
இருப்பது போன்ற படத்தை இயேசுவிடம் கேளுங்கள்.




உங்களுடைய படங்கள் உங்களுக்கு எதை உணர்த்துகின்றன
என்று, ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எப்பொழுதும் உங்கள் படங்களையும், வார்த்தைகளையும், உங்கள் விசேஷித்த நண்பனிடமோ அல்லது உங்கள் கலத் தலைவரிடமோ காண்பிக்கவும். அந்த வார்த்தைகளும், படங்களும் ஒன்றையொன்று ஒத்தனவா என்று சரி பார்க்க உதவியாக இருக்கும்.

இந்தப் புத்தகத்திலிருந்து உங்கள்
இருவருக்கும் விருப்பமான வசனத்தை இவ்விடத்தில்
எழுதுங்கள்.

இந்த புத்தகத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்கள் விசேஷித்த நண்பனிடம் கேட்பதற்காக அவற்றை இங்கு எழுதுங்கள்.



# இயேசுவுடன் வாழ்தல்

புத்தகம் 1: கடவுளுடைய குடும்பத்திற்குள் வரவேற்கின்றோம்
புத்தகம் 2: விசேஷ நேரங்களும்,ஈவுகளும்.
புத்தகம் 3: பேசுதலும்,கேட்டலும்.
புத்தகம் 4: என் மீதுள்ள அன்பும், மற்றவர்கள் மீதுள்ள அன்பும்.
புத்தகம் 5: பலமான பற்றுதல்கள்.
புத்தகம் 6: நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?
புத்தகம் 7: விசுவாசம் வைத்தல்.
புத்தகம் 8: இணைந்து போராடுதல்.

வேதாகமப் பகுதிகள், சொல் கண்டு பிடித்தல், வர்ணம் தீட்டுதல், மனன வசனங்கள், அதற்கும் மேலாக பெரியவர்கள் சிறியவர்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கூடாக கொள்கைகள் இலகுவான முறையில் விளக்கப்படுத்தப்பட்டும், பலப்படுத்தப்பட்டும் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன.

ஒரு தொனிப்பொருள் தலைப்பு.
விளக்கங்களும், நடவடிக்கைகளும்.
ஒரு மனன வசனம்.
மேலும் இணைந்து பகிர்ந்து கொள்ளுவதற்கு ஏதுவாக தெளிவாகத் தயார் செய்யப்பட்டதும், இலகுவாகப் பின்பற்றக் கூடியதுமான ஆலோசனைகள்.

விசுவாசத்தை நடைமுறைப்படுத்தவும், இணைந்து ஜெபித்தலை ஊக்குவிக்கவும், கடவுள் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவும் ஏற்ற ஆலோசனைகளுடன் கூடிய, இந்த எட்டுப் புத்தகங்கள், ஒரு பூரண சீஷத்துவப் பயிற்சியை உருவாக்குகின்றன.

தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாக் காரியங்களிலும் வளருவதற்கு, கிறிஸ்துவுடன் வாழ்தல் உங்கள் இருவரிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், உதவவும் செய்யும்.


அத்துடன் டப்னி கேர்க்கின்
வாரிசுகள் இணைந்து தலைமுறைகள் மத்தியிலான கலச் சபையை ஸ்தாபித்திருக்கின்றார்கள்.

ஆதரிப்பவரும்,பிள்ளையும் இப்பிரதிகளில் இருந்து பல நல்லவற்றைப் பெற்றுக் கொண்டு, பெறுமதியான ஆதரிப்பை வளங்குவதை உறுதி செய்கின்றது.

ஒரு பிள்ளை ஞானஸ்நானம் பெறவேண்டுமெனக் கேட்கும் பொழுது, இது குருமாருக்கும், கலத்தலைவர்களுக்கும், ஆதரிப்பவர்களுக்கும் கையேடாக இருக்கின்றது.

கையோடு கை சேர்த்து, இயேசுவுடன் வாழ்தல் மூலம் ஒரு பிள்ளையை ஆதரிக்கின்றார்கள்.

Thanks to The Korean Jun Sun Methodist Church, (Rev.Jun,Yong Ho) sponsored this book for printing. So that we make this book available at reduced cost. Their contribution are gratefully appreciated.



ISBN 955-8673-41-2

**LANKA PHILIP MISSION**
32/6,1/2, Averihena Road,
Polhengoda,Colombo 05
Sri Lanka.
Tel : 2818095

Rs.40/=